**P.R. No. 614** **Date 15.10.2012**

<u>**செய்தி வெளியீடு**</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (15.10.2012) தலைமைச் செயலகத்தில், சோழிங்கநல்லூர் எல்கோசெஸ் (ELCOSEZ)–ல் 1 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) நிர்வாக கட்டடத்தை திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கு வழங்கப்பட்ட ISO தரச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழ்நாட்டில் எட்டு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது. இந்த தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு ‘‘எல்கோசெஸ்’’ (ELCOSEZ) என்ற பெயர் சூட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சோழிங்கநல்லூரில் அறிவுசார் நகரியம் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு 377.08 ஏக்கர் நிலத்தை நில உரிமை மாற்றம் செய்ய 2005–ல் ஆணையிட்டார்கள். இந்த அறிவுசார் நகரிய நிலம் பின்னர் சிறப்புப் பொருளாதார மண்டல (Special Economic Zone) அந்தஸ்தை பெற்றது. முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான விப்ரோ, ஹெச்.சி.எல், சத்யம், சதர்லேண்ட் மற்றும் சி.டி.எஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இங்கு குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்ஸில் விப்ரோ, ஹெச்.சி.எல் மற்றும் சத்யம் நிறுவனங்கள் தோராயமாக 1,000 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளன. இந்த எல்கோசெஸ் மூலம் 29,200 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்ஸில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் 6358 சதுர அடி பரப்பளவில் 1 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடத்தை இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்தக் கட்டடத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகம் மற்றும் மத்திய கலால் அலுவலகம் ஆகியவை அமைய உள்ளன.

தேசிய அறிவுசார் வலையமைப்பு (National Knowledge Network - NKN) நாட்டிலுள்ள ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களை இணைக்கும் ஒரு அதிவேக வலையமைப்பாகும். சென்னை பெசன்ட் நகரில் தேசிய தகவலியல் மையத்தில் உள்ள தேசிய அறிவுசார் வலையமைப்பின் இணைப்பு முனையிலிருந்து (Point of Presence–POP) 1 Gbps (Gigabytes per second) அலைவரிசை இணைப்பு தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கும் (TAMILNADU STATE DATA CENTRE - TNSDC), தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பிற்கும் (TAMILNADU STATE WIDE AREA NETWORK - TNSWAN) வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பான அதிவேக அலைவரிசை இணைப்பைப் பயன்படுத்தி அரசுத் துறைகள் தேசிய அளவில் பயன்பாடுகளை உபயோகப்படுத்த முடியும். மேலும் தேசிய தரவு மையம் மற்றும் இதர மாநிலங்களின் தரவு மையங்களுடன் இணைப்பைப் பெற முடியும். தேசிய அறிவுசார் வலையமைப்புடன் (NKN) தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) மற்றும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் 60 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினால் (ELCOT) பெருங்குடி வளாகத்தில் அமைக்கப்பட்டு தனது செயல்பாடுகளை 1.8.2011 முதல் துவக்கியுள்ளது. தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (National e-Governance Programme - NeGP) கீழ் மின் ஆளுமை முயற்சிகளை வலுப்படுத்த தேவையான முக்கிய உள்கட்டமைப்புகளில் ஒன்றாக மாநில தரவு மையம் விளங்குகிறது. அரசுத் துறைகள் தங்களது மின் ஆளுமை பயன்பாடுகளை மிகவும் பாதுகாப்பான உள்கட்டமைப்புடைய இத்தரவு மையத்தின் மூலம் செயல்படுத்தலாம்.

தமிழ்நாடு மாநில தரவு மையம், தரவு மைய இயக்கத்திற்கான ISO 20000 சான்றிதழ் மற்றும் தகவல் பாதுகாப்பு மேலாண்மைக்கான ISO 27001 சான்றிதழ் ஆகியவற்றை பெறுவதற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கான ISO தரச் சான்றிதழ்களை இன்று டெட் நார்ஸ்க் வெரிடாஸ் (Det Norske Veritas) நிறுவனத்தின் தேசிய மேலாளர் திரு என்.ஆர். கிருஷ்ணகுமார் அவர்கள் வழங்கினார். நமது நாட்டில் ISO தரச் சான்றிதழ்களை பெறும் முதல் மாநில தரவு மையமாக தமிழ்நாடு மாநில தரவு மையம் விளங்குகிறது.

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), அரசு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கான தகவல் தொழில்நுட்ப வன்பொருள்கள் மற்றும் மென்பொருள்களைக் கொள்முதல் செய்யும் விருப்ப முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தால் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நியமனத் தொகை மற்றும் கொள்முதல் முன் வைப்புத் தொகைக்கான வட்டியாக 14 கோடியே 89 லட்சத்து 90 ஆயிரத்து 529 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் முக்கூர் திரு.என். சுப்பிரமணியன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர், தலைமைச் செயலர், தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலர், எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 15.10.2012